**வலிப்பு நோய் வைத்தியசாலை மற்றும் சுகாதார நிலையத்தை நிறுவுவதற்கான செயற்திட்டம் - 2014**

---

வலிப்பு நோய் வைத்தியசாலை மற்றும் சுகாதார நிலையத்தை நிறுவுவதற்கான செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச்செய்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 மார்ச் 26 ஆந் திகதிய 7/477 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் படி அமுலாக்கப்படுகின்றது

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், அப்போதைய சுகாதார பராமரிப்பு மற்றும் போசாக்கு அமைச்சான தற்போதைய சுகாதார அமைச்சு போசாக்கு மற்றும் சுதேசிய வைத்திய அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பிலுள்ள பொது வைத்தியசாலையிலுள்ள இடங்களில் வலிப்பு நோய் வைத்தியசாலை மற்றும் சுகாதார நிலையத்தை நிர்மாணிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 2,918 மில்லியனானதுடன் அதில் ஐ.அ.டொலர் 20 மில்லியனிற்கு (சவுதி றியால் 75 மில்லியன்) சமமான ரூபா 2,273 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2008 மார்ச் 26 இல் தொடங்கியிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்ட காலப்பகுதி 2016 மார்ச் 31 வரை மூன்று சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு

நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 முனைப்பழிவுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 அம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழிவுள்ளதாக்கப்படுகிறது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 278,296 கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் கணனி உபகரணங்கள் ஆதனம், பொறி மற்றும் அலுவலக உபகரணங்களின் கீழ் கணக்கிடுவதற்குப் பதிலாக நடைபெறும் வேலையின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 5 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம், உரிய காலப்பகுதிக்காக மாத்திரம் ரூபா 80,000 படிக்கு தகுதியுடைய போதிலும் செயற்திட்ட பணிப்பாளர் மீளாய்வாண்டின் போது ரூபா 285,000 தொகையான எரிபொருள் படி பெற்றிருந்தார்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | சவுதி றியால் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | சவுதி றியால் மில்லியன் | ரூபா மில்லியன் | சவுதி றியால் மில்லியன் | ரூபா மில்லியன் |
| எஸ்எவ்டி | 75 | 2,273 | 1,920 | 7.42 | 262.38 | 35.25 | 1,188 |
| இலங்கை அரசாங்கம் | - | 645 | 200 | - | 104.84 | - | 247 |
| மொத்தம் | 75 | 2,918 | 2,120 | 7.42 | 367.22 | 35.25 | 1,435 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், கடன் பெறுகைகளின் 49.16 சதவீதம் மாத்திரம் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கியதிலிருந்து 6 ½ ஆண்டுகள் கடந்த பின்னர் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 2,273 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் காக்கை வலிப்பிற்கான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒதுக்கீடுகளின் பயன்பாட்டு விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆக்ககூறுகள் | ஒதுக்கீடு | வழங்கப்பட்ட ஒப்பந்த பெறுமதி | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய தொகை |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மருத்துவ உபகரண கொள்வனவு | 1,008 | 337 | 337 |
| பிரதான கட்டிடத்தின் நிர்மாணம் | | | |
| - நிரப்புதல் | 970 | 91 | 80 |
| - நிர்மாணம் | - | 1793 | 980 |
| ஆலோசனை | 190 | 224 | 205 |
| ஒதுக்கப்பட்டிருக்காதவை | 105 | -- | |
| | 2,273 | 2,445 | 1,602 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், கட்டிட நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் ரூபா 1,793 மில்லியனில் வழங்கப்பட்டிருந்தது அதேநேரம் ரூபா 969.80 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மாத்திரம் கடன் உடன்படிக்கையில் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மருத்துவ உபகரணக் கொள்வனவிற்கான ஒப்பந்தம் ரூபா 337 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டிருந்த அதேநேரம் கடன் உடன்படிக்கையில் ரூபா 1,008 மில்லியன் தொகையான ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், மருத்துவ உபகரணங்கள், தளபாடங்கள், மின்பிறப்பாக்கிகள், ஆலோசனை என்பவற்றினை கொள்வனவு செய்வதற்கும் மேலதிக கிரயத்தினை செய்வதற்கும் சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரால் 2015 யூன் 10 இல் சவுதி நிதியத்திடமிருந்து ரூபா 1,480 மில்லியன் தொகையான மேலதிக நிதிகள் கோரப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

காக்கை வலிப்பு வைத்தியசாலையின் கட்டிட நிர்மாணம் 2014 ஏப்ரல் 04 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாண வேலைகளின் பௌதீக முன்னேற்றம் 82 சதவீதமாகவும் நிதி முன்னேற்றம் 62 சதவீதமாகவும் அறிக்கையிடப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் பிரகாரம், வைத்தியசாலை கட்டிடம் 242 கட்டில்களுடன் கொண்டிருப்பதற்கு திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், வைத்தியசாலை இந்த கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த ஆரம்ப திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத பல புதிய பிரிவுகளின் விளைவால் 152 கட்டில்களை மாத்திரம் கொண்டிருந்தது என்று பௌதீக மெய்மையாய்வில் வெளிப்பட்டது.

(ஆ) வைத்தியசாலையின் 10 மாடி கட்டிடத்தில் நிலப்பகுதி காந்த வள படப்பிடிப்பு ஸ்கானர் பகுதியையும் இரண்டாவது மாடி உபகரண பகுதியையும் மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் பொருத்துதலிலுள்ள தாமதம் காரணமாக 2015 யூலை 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிரந்தர அடிப்படையில் நபரொருவரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 3½ ஆண்டுகளிற்கு மேலாக உரிய அமைச்சின் உத்தியோகத்தரால் செயற்திட்ட பணிப்பாளர் பதவி தொடர்ச்சியாக மேவப்பட்டிருந்தது. மேலும், நிதி முகாமையாளர், செயற்திட்ட பொறியியலாளர் (உயிரில் மருத்துவம்), கொள்வனவு உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் போன்றோரின் கடமைகள் பகுதி நேர அடிப்படையில் உரிய அமைச்சின் உத்தியோகத்தரால் மேவப்பட்டிருந்தது. மேலும், மருத்துவ ஒருங்கிணைப்பாளர்களின் 02 பதவிகள் 03 ஆண்டுகளிற்கு மேலாக வெற்றிடமாக இருந்தது. அத்தகைய பிரதான பதவிகளில் இருந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான நபர்களை சேர்ப்பதிலுள்ள தாமதம் காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகளின் செயற்பாடுகளை சுமூகமாக்குவதற்கு பாதகமாக பாதித்திருந்தது.

(ஆ) சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் சட்ட உத்தியோகத்தரிற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 213,990 கூட்டு மொத்த தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவரிடமிருந்து குழு குறிப்புரைகள் மற்றும் பெறப்பட்ட சேவைகள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை.